Journal of Valartamil, eISSN 2821-3157,
Volume 2, No.1, 2021, (43 - 54)

# கோவிட்19 காலத்தில் கற்றல் கற்பித்தல்: ஓர் ஆய்வு

## A Study on Teaching and Learning During the Pandemic COVID 19

**Franklin Thambi Jose.S[1]**
Lecturer
Universiti Pendidikan Sultan Idris, MALAYSIA
thambijoshs@gmail.com

**Sundarabalu. S[2]**
Lecturer
Bharathiyar University, INDIA
sunder_balu@yahoo.co.in

**Published:** 08 October 2021

**To cite this article (APA):** Jose. S, F. T., & Sundarabalu, S. (2021). கோவிட்19 காலத்தில் கற்றல் கற்பித்தல்: ஓர் ஆய்வு. *Journal of Valartamil*, *2*(2), 43-54. https://doi.org/10.37134/jvt.vol2.2.4.2021

**To link to this article:** https://doi.org/10.37134/jvt.vol2.2.4.2021

**ஆய்வுசாரம்**: கோவிட்19 என்கிற மிகப் பயங்கரமான தொற்று நோய் உலகத்தையே சிதைத்துக்கொண்டிருக்கிறது. இந்தத் தொற்றின் காரணமாகப் பல துறைகள் இயங்கமுடியாமல் சிக்கலை நோக்கிச் செல்வதைக் காணமுடிகிறது. அது கற்றல் கற்பித்தலையும் விட்டுவைக்கவில்லை. பள்ளிகளில் பாரம்பரியமாக நடந்து வந்த கற்றல் கற்பித்தல் வகுப்பையே மாற்றி அமைத்தது. இந்தியாவில் குறிப்பாகத் தமிழ் நாட்டில் புதிய முறையான இயங்கலை கற்றல் கற்பித்தல் (Online teaching and learning) பள்ளிகளில் நடைமுறைக்கு வந்தது. இக்கட்டுரை குமரி மாவட்டத்திலிருக்கும் பள்ளி ஆசிரியர்களிடமிருந்தும் மாணவர்களிடமிருந்தும் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் அமைந்திருக்கிறது. மேலும், இது இணையம் வழி நடைப்பெறுகின்ற பள்ளி வகுப்பின் உண்மை நிலையைக் கண்டறிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வில் 25 ஆசிரியர்களும் 135 மாணவர்களும் கலந்துகொண்டனர். வினா நிரல் மூலம் பத்து பள்ளிகளிலிருந்து தரவுகள் திரட்டப்பட்டன. முடிவாக, இவ்வாய்வின் மூலம் கற்றல் கற்பித்தல் வகுப்பறையில் சிக்கலின்றி பயன்யுள்ளதாக நடைபெறுகிறது எனக் காட்டுகிறது.

***கருச்சொற்கள்**: ஆசிரியர், இயங்கலை, கற்றல், கற்பித்தல், பள்ளி, மாணவர்.*

**Abstract:** The pandemic COVID19 is destroying the world. The whole world has stuck and many issues rose due to this pandemic. It affected even the process of teaching and learning. It changed the traditional way of teaching and learning in schools. A new method online teaching and learning was implemented in India especially in Tamil Nadu schools. This article focussed on the schools in Kanyakumari District of Tamil Nadu. It is based on the data collected from the teachers and students through online. The aim of the study is to conduct a study among schools teachers and students to identify the real situation of their online class. 25 teachers and 135 students participated in this study. Data were collected from 10 different schools through a structured questionnaire. Finally, the study shows that teaching and learning are taking place effectively without any issue.

***Keywords:*** *learning, school, student, teaching, teacher, online*

## முன்னுரை

உலகத்தில் பல நாடுகளில் கோவிட்19 என்கிற நோய் தொற்றிக்கொண்டது.. அது எல்லா துறைகளையும் உருகுலைத்துப்போட்டது. கோவிட்19 கல்வி துறையையும், குறிப்பாகக் கற்றல் கற்பித்தலையும் விட்டுவைக்கவில்லை (*Nair, 2020)*. இந்தத் தொற்று 2019இல் தோன்றினாலும் 2020இல் இந்தியா போன்ற நாடுகளில் அதன் தாக்கம் அதிகரித்தது. மேலும், 2019-2020 கல்வியாண்டாக இருந்த காரணத்தால் தேர்வு மட்டுமே சிரமமாகக் காணப்பட்டது. ஆனால், 2020-2021 கல்வியாண்டிலிருந்து கற்றல் கற்பித்தலில் சிக்கல் ஏற்பட ஆரம்பித்தது. பாரம்பரியமாக நடந்துவந்த கற்றல் கற்பித்தல், வகுப்பறையையே மையப்படுத்தி அமைந்திருந்தது. அது தொற்று நோய் தாக்கதால் மாறுதல் அடைந்தது *(Thambi Jose, et.al, 2020*). இந்தியாவில் குறிப்பாகத் தமிழ் நாட்டில் புதிய முறையான இயங்கலை கற்றல் கற்பித்தல் *(online)* பள்ளிகளில் நடைமுறைபடுத்தப்பட்டது. பள்ளிகளில் நடந்துகொண்டிருக்கும் இக்கல்வியைப் பற்றிய ஓர் ஆய்வின் மூலம் பெறப்பட்ட தரவுகளை மையபடுத்தி இக்கட்டுரை அமையப்பெற்றது.

## கோவிட்19

கோவிட்19 எனப்படுவது ஒரு விதமான தொற்று நோய் ஆகும். இது வேகமாகப் பரவும் நோயாகும் *(Ganguli, 2021)*. கோவிட் என்பது ஆங்கிலச் சொல். கோ *(CO)* – கொரொணா *(Corona)* எனவும், வி *(VI)* – வைரஸ் (virus) எனவும் ட் *(D)* - நோய் *(disease)* எனவும் உலக சுகாதார அமைப்பு *(World Health Organisation – WHO)* குறிப்பிடுகிறது. இந்நோய் இன்றுவரை உலகத்தையே அச்சப்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலும் அதன் தாக்கம் காணப்படுகின்றது. இதனால் ஆரம்பத்தில் கற்றல் கற்பித்தல் பாதிக்கப்பட்டது. இந்தியாவில், குறிப்பாகத் தமிழ் நாட்டில்

மாணவர்களும் ஆசிரியர்களும் கற்பிக்க கற்க முடியாத சூழல் ஏற்பட்டது. அரசின் கட்டளைக்கிணங்க அவர்கள் வீட்டில் இருக்க நேர்ந்தது. இதனால், மாணவர்களின் பள்ளி வாழ்க்கை பாதித்தது. கல்வியாளர்களின் அறிவுறுத்தலின் பலனாக அரசு இயங்கலை கற்றல் கற்பித்தல் முறையை நடைமுறைப்படுத்தியது. தொடக்கப்பள்ளி, இடைநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் இதன் மூலம் பயன்பெற்றாலும், பாலர் பள்ளி மாணவர்கள் பள்ளி (வகுப்பறை) என்றால் என்ன என்று தெரியாமலே கற்று வருகின்றனர். மாணவர்கள் வீட்டிலிருந்து பயில்கின்ற காரணதால் பல பெற்றோர்களும் பாதிக்கப்பட்டனர். தங்கள் குழந்தைகளுக்குக் கைப்பேசி வாங்குவது முதல் இணையம் பெறுவது வரை பெற்றோர்கள் சிரமம் அடைந்தனர். இன்றும் பலரும் சிரமம் அடைந்து கொண்டிருக்கின்றனர்.

## கற்றல் கற்பித்தல்

கற்றல் கற்பித்தல் என்பது ஒரு செயற்பாங்கு. அதில் மாணவர்களும் ஆசிரியர்களும் முக்கிய பங்கு வகிப்பர். கல்வி மட்டுமல்லாது ஒழுக்கத்தையும் சேர்த்து கற்றுக்கொடுப்பார்கள் ஆசிரியர்கள். பொதுவாகக் கற்றல் கற்பித்தல் வகுப்பறையில் நடைபெறும். தற்காலத்திலுள்ள, பள்ளி வகுப்புகளில் தொழில் நுட்பம் சார்ந்த கருவிகளைக் காணலாம். இதன் மூலம் கற்றல் கற்பித்தல் எளிமையாகிறது (Nadarajan, 2019). அதுமட்டுமல்ல, பழைய வகுப்பறை மாறி புதிய வகுப்பறையில் தொலைக்காட்சி, திறன் பலகை, வண்ண வண்ண நாற்காலிகள், பல நிறங்களில் சுவர்கள், குளிரூட்டி, போன்றவற்றைக் காணலாம். இவ்வகை வகுப்பறைகளில் கற்றல் கற்பித்தல் நடைபெறும் போது, மாணவர்கள் சுலபமாகப் பயில்கின்றனர். ஆசிரியருடைய வேலை இங்கு எளிமையாகிவிடுகின்றது. மேலும், பல வகையான கற்றல் கற்பித்தல் நடைபெறுகின்றன. அதில், இயந்திரம் மூலம் கற்றல் கற்பித்தல், தொலைக்காட்சி, கைப்பேசி, கணினி போன்றவற்றைக் குறிப்பிடலாம். தற்போது, இயங்கலை கற்றல் கற்பித்தல் முறை பயன்பாட்டில் உள்ளது.

## முந்தைய ஆய்வுகள்

கற்றல் கற்பித்தல் இந்தியாவில் மட்டுமல்ல உலகத்திலுள்ள பல நாடுகளில் கோவிட்19 தொற்றின் காரணமாக இணையம் மூலம் நடைபெறுகின்றது. 2020 ஆண்டு முதல் ஆய்வுகள் இயங்கலை கற்றல் கற்பித்தலில் நடைபெற்று வருகின்றன. எனவே, இது தொடர்பான ஆய்வுகள் குறைவாகவே காணப்படுகின்றன.

*Carrillo and Assuncao (2020),* தங்களுடைய ஆய்வுக் கட்டுரையில் கோவிட்19யின் தாக்கம் கற்றல் கற்பித்தலில் இருப்பதாகக் கூறுகின்றனர். எல்லாக் கல்வி நிறுவனங்களையும் பாதித்துள்ளதாகக் கூறுகின்றனர். மேலும், இயங்கலை கற்றல் கற்பித்தல் காலத்தின் கட்டாயம் என்று குறிப்பிடுகின்றனர். இவர்கள் தங்களுடைய ஆய்வில் ஆசிரியர்களின் பங்கைப் பற்றி விளக்குகின்றனர். ஆசிரியர் கல்வியைப் பற்றியும் குறிப்பிடுகின்றனர். இணையம் மூலம் கற்றல் கற்பித்தலின் தாக்கம் எவ்வாறு காணப்படுகிறது எனவும் விளக்குகின்றனர். இக்கட்டுரை மூலம் ஆய்வாளருக்கு இயங்கலை கற்றல் கற்பித்தல் பற்றிய அரிய தகவல்கள் கிடைக்க உதவியது.

தொடர்ந்து, கற்றல் கற்பித்தலில் பழைய பாரம்பரிய முறையையும் புதிய இணைய முறையையும் ஒப்பீடு செய்து கிரிஷா மற்றும் ஆய்வாளர்கள் *(Girisha & Et.al., 2021)* கட்டுரை ஒன்றைப் படைத்துள்ளார்கள். இக்கட்டுரை கோவிட்19 காரணமாகக் கற்றல் கற்பித்தலில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி விளக்குகின்றது. மாணவர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் ஆகியோரிடமிருந்து தரவுகள் கள ஆய்வு மூலம் திரட்டப்பட்டுள்ளன. 874 பதில்களைத் திரட்டியுள்ளார்கள். இயங்கலை கற்றல் கற்பித்தல் நடைப்பெறுவதால் ஏற்படும் சிக்கல்களை இக்கட்டுரையில் காணலாம். வினா நிரல் மூலம் தரவுகளைத் திரட்டியுள்ளார்கள். ஆய்வாளர்கள் இதன் மூலம் வினா நிரலின் அமைப்பு, தரவுத் திரட்டுதல், பாகுப்பாய்வுச் செய்தல் போன்றவற்றை அறிந்து கொண்டனர்.

மேற்கண்ட ஆய்வுகள் கோவிட்19 காரணமாகக் கற்றல் கற்பித்தலில் ஏற்பட்ட மாற்றம், சிக்கல், கோவிட்19இன் தாக்கம், ஆசிரியர்-மாணவர் பங்கு ஆகியவை எடுத்துக்காட்டுகின்றன. முதல் கட்டுரையில், இயங்கலை கற்றல் கற்பித்தல் தேவை என்றும் அது மாணவர்களை ஊக்கப்படுத்தும் எனறும் முடிவாகக் கூறியுள்ளனர். கல்வி நிறுவனங்கள் அவசர படாமல், கல்வி துறையைச் சார்ந்தவர்கள் கோவிட்19க்கான தடுப்பூசி எடுத்துக்கொண்ட பின் பணியை ஆரம்பிக்கலாம் என வலியுறுத்துகின்றனர். மற்ற கட்டுரையில், ஆய்வாளர்கள் தரவுகளின் அடிப்படையில் கற்றல் கற்பித்தலில் தொழில்

நுட்பத்தின் பங்கும் அதனைச் சார்ந்த அணுகுமுறையைப் பயன்படுத்துவதின் முக்கியத்துவத்தை முடிவாகக் கொண்டுள்ளது. ஆகவே, கோவிட்19 காலத்தில் கற்றல் கற்பித்தல் என்னும் தலைப்பில் ஆராயும் முயற்சியானது புதுமையான ஒன்றாகும்.

## சிக்கல்

கோவிட்19 காலத்தில் பள்ளிகளைத் திறப்பதும் பாடம் நடத்துவதும் சிரமமாக ஆரம்பத்தில் காணப்பட்டது. ஆனால் 2020-2021ஆம் கல்வியாண்டில் இந்த நிலை மாறியது. தமிழ் நாடு அரசு பள்ளிகளில் இணையம் மூலம் கற்றல் கற்பித்தலை அறிமுகப்படுத்தியது. தொடக்க காலத்தில் இணையம், தொழில் நுட்பம் போன்ற சிக்கல்கள் இருந்தபோதிலும் மாணவர்களும் ஆசிரியர்களும் சுதாரித்துக்கொண்டனர். ஆனால் இணைய வகுப்பில் சிக்கல் இருப்பதாகப் பெற்றோர் பள்ளிகளிலும் கல்வி துறையிலும் புகார் அளித்தனர் (Dinamalar, Oct.2020). மேலும், மாணவர்களுக்கு வீட்டுப்பாடம் எழுதுவதிலும் வாரத்தேர்வுக்குப் படிப்பதிலும் சிக்கல்கள் காணப்பட்டன. ஆசிரியர்களுக்கும் சீரான முறையில் வீட்டுப்பாடம் கொடுத்தல், வீட்டுப்பாடத்தைத் திருத்துதல், பாட வேளைகளில் கற்பித்தல், மாணவர்களை ஊக்கப்படுத்துதல் போன்றவைச் சிக்கல்களாக எழுந்தன. இவைகளைக் களையவும் உண்மை நிலையைக் கண்டறியவும் இவ்வாய்வு நடத்தப்பட்டது.

## நோக்கம்

இவ்வாய்வு இணையம் வழி நடைபெறுகின்ற பள்ளி வகுப்பின் உண்மை நிலையைக் கண்டறிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## அணுகுமுறை


கள ஆய்வை மையப்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வில், வினா நிரல் ஆய்வுக் கருவியாகும். ஆய்வுக் கருவி என்பது ஓர்

ஆய்வை மேற்கொள்ளும் போது ஆய்வாளர் பயன்படுத்தும் கருவியாகும் *(Rose and Baffoe-Djan, 2020).* இரண்டு விதமான கேள்வி தொகுப்புகள் இவ்வினா நிரலில் கொடுக்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கான 100 கேள்விகளும் ஆசிரியர்களுக்கான 25 கேள்விகளும் இதில் அடங்கும். வினா நிரலை முந்தைய ஆய்வின் துணையோடு தயாரிக்கப்பட்டது. தயாரிக்கப்பட்ட ஆய்வுக் கருவி எல்.எம்.எஸ் மேல் நிலைப்பள்ளியின் தலைமையாசிரியரால் சரி பார்க்கப்பட்டு ஏற்புடைமையை உறுதி செய்தார். பின்னர், வினா நிரல் மூலம் தரவுகள் திரட்டப்பட்டன. தென் தமிழ் நாட்டில் அமைந்திருக்கும் குமரி மாவட்டத்திலுள்ள பத்து பள்ளிகள் இவ்வாய்வுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. ஆசிரியர்களிடமிருந்தும் மாணவர்களிடமிருந்தும் தரவுகள் தனிதனியாகத் திரட்டப்பட்டன. 25 ஆசிரியர்களும் 135 மாணவர்களும் இவ்வாய்வில் கலந்துகொண்டனர். திரட்டிய தரவுகள் எக்ஸெல் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டது. இவ்வாய்வின் மூலம் 10 ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் ஒரு சில (10) விடைகள் மட்டுமே இக்கட்டுரையில் கொடுக்கப்பட்டுள்ளன.

## தரவுகள் பகுப்பாய்வு

வினா நிரலிலுள்ள கேள்விகளின் அடிப்படையில் தரவுகள் பகுப்பாய்வு எக்ஸெலில் செய்யப்பட்டுள்ளது. ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட விடைகள் குறிவரைபடம் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளன.


கேள்வி-1: உங்கள் பள்ளியில் இயங்கலை கற்றல் கற்பித்தல் நடைபெறுகிறதா?




குறிவரைபடம்-1 இயங்கலை கற்றல் கற்பித்தல்.

10 ஆசிரியர்கள் கலந்துகொண்டதில், அனைத்து ஆசிரியர்களும் 'ஆம்' என்று பதில் அளித்தனர். இவர்கள் அனைவரும் வெவ்வேறு பள்ளிகளைச் சார்ந்தவர்கள் ஆவர். ஆக, தெரிந்தெடுக்கப்பட்ட அனைத்துப் பள்ளிகளிலும் இயங்கலை கற்றல் கற்பித்தல் நடைபெறுகின்றது என இந்த விடை வழி அறியலாம்.


கேள்வி-2: ஒரு வாரத்தில் எத்தனை வகுப்பு இயங்கலை கற்றல் கற்பித்தல் மூலம் நடைபெறுகிறது?




குறிவரைபடம்-2 வகுப்புகளின் எண்ணிக்கை

இதில், மூன்று வகுப்புகள் என ஓர் ஆசிரியரும் நான்கு வகுப்புகள் என ஒன்பது ஆசிரியர்களும் விடையளித்தனர். ஆசிரியர்கள் குறைந்தபட்சமாக மூன்று வகுப்புகளையும் அதிகபட்சமாக நான்கு வகுப்புகளையும் நடத்துகின்றனர் என தெரிந்துகொள்ளலாம். மேலும், இப்பள்ளிகளில் எல்லா ஆசிரியர்களும் பாடம் நடத்துகின்றனர் என இதன் மூலம் புலப்படுகிறது.


கேள்வி-3: இயங்கலை கற்றல் கற்பித்தல் மூலம் நீங்கள் கற்பிக்கும் பாடம் என்ன?




குறிவரைபடம்-3 இயங்கலை கற்றல் கற்பித்தலின் பாடம்

கிடைக்கப்பெற்ற விடைகளின் அடிப்படையில், ஓர் ஆசிரியர் கணிதம் எனவும், நான்கு ஆசிரியர்கள் ஆங்கிலம் எனவும், ஐந்து ஆசிரியர்கள் அறிவியல் எனவும் குறிப்பிட்டனர். இதன் மூலம், கணிதம், ஆங்கிலம், அறிவியல் ஆகிய பாடங்களைப் பள்ளிகளில் கற்பிக்கின்றனர் என அறிந்துகொள்ளலாம்.


கேள்வி-4 நீங்கள் கற்பிக்கும்போது மாணவர்களுடன் கலந்துரையாடுவீர்களா?




குறிவரைபடம்-4 மாணவர்களுடன் கலந்துரையாடுதல்

இந்தக் கேள்விக்கு, 'ஆம்' என்று எட்டு ஆசிரியர்களும் 'இல்லை' என்று இரண்டு ஆசிரியர்களும் பதிலளித்துள்ளனர். பொதுவாக, இயங்கலை கற்றல் கற்பித்தல் நடைபெறும் போது ஆசிரியர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடுவதில்லை என்கிற கூற்றுக்கு இங்குப் பதில் கிடைத்துள்ளது. தெரிந்தெடுக்கப்பட்ட அனைத்துப் பள்ளிகளிலும் ஆசிரியர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடுகின்றனர் என இதன் மூலம் அறிந்துகொள்ளலாம்.


கேள்வி-5 மாணவர்களுக்குக் கேள்வி கேட்க நேரம் ஒதுக்குவீர்களா?




குறிவரைபடம்-5 கேள்வி கேட்க நேரம்

அனைத்து ஆசிரியர்களும் 'ஆம்' என்று பதில் அளித்தனர். ஆக, கிடைக்கப்பெற்ற விடைகளின் அடிப்படையில், அனைத்து ஆசிரியர்களும் மாணவர்களுக்குக் கேள்வி கேட்க நேரம் ஒதுக்குகின்றார்கள் என அறிந்துகொள்ளலாம்.


கேள்வி-6 நீங்கள் கற்பிக்கும்போது மாணவர்களுக்குப் பயிற்சி (drill) வழங்குவீர்களா?




குறிவரைபடம்-6 பயிற்சி வழங்குதல்

இந்தக் கேள்விக்கு, 'ஆம்' என்று எழு ஆசிரியர்களும் 'இல்லை' என்று மூன்று ஆசிரியர்களும் பதிலளித்துள்ளனர். இயங்கலை கற்றல் கற்பித்தலில் மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பது கடினம். ஆனால் இங்கு அதிகமான ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதைக் காணமுடிகிறது. தெரிந்தெடுக்கப்பட்ட பள்ளிகளில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு இயங்கலை வகுப்பில் பயிற்சி வழங்குவதை அறிந்துகொள்ளலாம். 'இல்லை' என்று பதிலளித்த ஆசிரியர்கள், வகுப்புக்குப் பின்னர் பயிற்சி வழங்குவதாகக் கூறினர்.


கேள்வி-7 நீங்கள் கற்பிக்கும்போது தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவீர்களா?



குறிவரைபடம்-7 தொழில் நுட்பம்

இந்தக் கேள்விக்கு அனைத்து ஆசிரியர்களும் 'ஆம்' என்று பதில் அளித்தனர். அனைத்து ஆசிரியர்களும் கற்பிக்கும்போது தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதாக அறிந்துகொள்ளலாம். தெரிந்தெடுக்கப்பட்ட அனைத்துப் பள்ளி ஆசிரியர்களும் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவது, அதன் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றது. குறிப்பு: வகுப்பில் தொழில் நுட்பம் என்பது காணொலி, ஒலி, படம், வெண்பலகை போன்றவற்றின் மூலம் மாணவர்களுக்குக் காண்பிப்பது ஆகும்.


கேள்வி-8 நீங்கள் இயங்கலை வகுப்பில் முழு நேரமும் பாடம் நடத்துவீர்களா?




குறிவரைபடம்-8 பாடம்

கேட்ட வினாவுக்கு அனைத்து ஆசிரியர்களும் 'இல்லை' என்று பதில் அளித்தனர். கிடைக்கப்பெற்ற விடைகளின் அடிப்படையில், அனைத்து ஆசிரியர்களும் வகுப்பில் முழு நேரமும் பாடம் நடத்துவதில்லை என அறிந்துகொள்ளலாம். மேலும், மாணவர்களுடைய சந்தேகம்/கேள்விக்கு நேரம் ஒதுக்குவதாக ஆசிரியர்கள் கூறினார்கள்.


கேள்வி-9 நீங்கள் இயங்கலை வகுப்பில் மாணவர்களை வாசிக்க செய்வீர்களா?




குறிவரைபடம்-9 வாசிப்பு

இயங்கலை வகுப்பில் மாணவர்களை வாசிக்க செய்வதில்லை என்று 9 ஆசிரியர்களும் 'ஆம்' என்று ஓர் ஆசிரியரும் விடைகளையளித்தனர். இயங்கலை வகுப்பில் பாடத்தை விளக்குவது, மாணவர்களைக் கேள்வி கேட்க வைப்பது, கேள்விகளுக்கு விடையளிப்பது, வீட்டுப்பாடம் கொடுப்பது போன்றவைகளில் நேரம் சரியாகயிருப்பதால், வகுப்பில் மாணவர்களை வாசிக்க செய்வதில்லை என்கிற தகவலையும் ஆசிரியர்கள் கூறினார்கள். இதன் மூலம் இயங்கலை வகுப்பில் வாசிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்று அறிந்துகொள்ளலாம்.

கேள்வி-10 நீங்கள் மாணவர்களுக்கு வீட்டுப்பாடம் கொடுப்பீர்களா?




குறிவரைபடம்-10 வீட்டுப்பாடம்

'ஆம்' என்று 7 ஆசிரியர்களும் 'இல்லை' என்று 3 ஆசிரியர்களும் விடையளித்தனர். பொதுவாகப், பள்ளிகளில் வீட்டுப்பாடம் கொடுக்கும் முறை தமிழ் நாட்டில் நடைமுறையில் உள்ளது. வீட்டுப்பாடத்தால் மாணவர்கள் வகுப்பறையில்

கற்றவைகளை மீண்டும் நினைவுகூர்ந்து பயிற்சியெடுப்பர். இயங்கலை வகுப்பிலும் ஆசிரியர்கள் வீட்டுப்பாடம் கொடுப்பதை இவ்விடைகள் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

இவ்வாறாக, 10 ஆசிரியர்களும் கேள்விக்கு ஏற்றார்போல் விடைகளையளித்தனர். 'ஆம்' அல்லது 'இல்லை' என்று விடையளிக்கூடிய 8 கேள்விகளும் மற்ற விடைகளைக்கொண்ட 2 கேள்விகளும் இவ்வினாநிரலில் கொடுக்கப்பட்டுள்ளன. தரவுகளைக் குறிவரைபடங்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளன. *Girisha & Et.al (2021)* இன் கூற்றுபடி வளர்கின்ற நாடான இந்தியாவில் இயங்கலை வகுப்பில் பள்ளி ஆசிரியர்கள் அரசின் திட்டத்தைச் செயல்படுத்துகின்றனர். இதனை உறுதி செய்யும் வண்ணமாக இந்தப் பகுப்பாய்வு அமைந்துள்ளது. இயங்கலை வகுப்பு நல்ல முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதனை இப்பகுப்பாய்வு மூலம் அறிந்துகொள்ளலாம்.

## முடிவுரை

இயங்கலை கற்றல் கற்பித்தலில் மூலம் கற்றல் கற்பித்தல் என்கிற உத்தியை அரசு, பள்ளிகளில் 2020-2021ஆம் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தியது. இது பள்ளி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் புதிய முறையாகத் தோன்றினாலும் பல உயர் கல்வி நிறுவனங்களில் அறிமுகமான ஒன்றாகும். இந்த முறையில் வீட்டில் இருந்தபடியே கற்றலும் கற்பித்தலும் நடைபெறுகின்றன. ஆசிரியர்களிடம் கேட்கப்பட்ட வினாகளுக்கு வெவ்வேறான விடைகளே அளித்தனர் என்பதனைப் பகுப்பாய்வின் மூலம் அறியலாம். ஆசிரியர்கள் மாணவர்களிடம் உரையாடுவதிலும் கேள்வி கேட்க நேரம் ஒதுக்குவதிலும் ஆர்வம் காட்டுவது சாதாரண வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் நடைபெறுவது போன்றே காணப்படுகின்றது. இதைப்போன்று வீட்டுப்பாடம் கொடுப்பதையும் காணமுடிகின்றது. இவ்வாய்வின் மூலம் கற்றல் கற்பித்தல் வகுப்பறையில் சிக்கலின்றி நடைபெறுகிறது எனக் காட்டுகிறது. மேலும், இவ்வாய்வு பள்ளிகளில் நடைபெறும் இயங்கலை வகுப்பின் உண்மை நிலையைக் கண்டறிய முடிந்தது.

## REFERENCES

Carrillo, Carmen and Assuncao Flores, Maria. (2020). COVID-19 and Teacher Education: A Literature Review of Online Teaching and Learning Practices. European Journal of Teacher Education. 43(4), 466-487.

Dinamalar, Daily newspaper – Oct. 2020

Ganguli, Bodhisatva (2021), COVID19 Curfew. ET - Economic Times Wealth Magazine. Jan-Feb, 12-14.

Girisha, Lakshman Naik and et.al. (2021). Online Teaching and Learning of Higher Education in India during COVID-19 Emergency Lockdown. Pedagogical Research. 6(1), 1-14.

Nadarajan, P (2019). Puthiya uthi mulam ilakkiyam karpitalum matippidum (Teaching and Testing Literature through New Method), Mysore: Southern Regional Language Centre.

Nair, Sridhar (2020). Kalviyil coronavin thakkam (The Impact of Corona in Education), Athancode: Kumari man pailarangam.

Rose, H., McKinley, J., and Baffoe-Djan, J. B. (2020). Data Collection Research Methods in Applied Linguistics. London: Bloomsbury Academic.

Thambi Jose, Franklin; Preethi, J and Vijaya, P. (2020). Teaching with Technology in UPSI Classrooms. PJAEE. 17 (7), 10744-10751.

World Health Organisation – WHO. Coronavirus. retrieved from https://www.who.int/